# 2. நின்றநிலை விண்ணப்பம்.

18

*பண் - பழம்பஞ்சுரம்.*

**நி**த்த முன்றனைப் பாவித் தோர்ந்தது நிச்ச யம்மென் றுணர்த்தவே
சத்தி யத்தொடு மென்மு னேவந்தென் றாச வாவெனு நாளெதாய்
நத்து மோவன்று தானன் றோவென்ற னாட்டங் கூடுத லாகுநாள்
முத்த னேமுரு கைய னேபர மோன னேயறி வாயரோ. 1

**ம**ண்ணி னாசை மடங்கி நானந்த விண்ணி னாசையை வெளவுநாள்
எண்ணு கின்ற படிக்கு நீவந் திணக்கி யன்பொ டுரைக்குநாள்
ஒண்ணு மேலருள் பண்ணு மேயென் னுயிரிரி னுக்குயி ராய்மிளிர்
அண்ண லார்விழி பன்னி ரண்டுடை யண்ண லேயறி வாயரோ. 2

**மா**த ராற்றத்தித் தத்தித் தாவு மனக்கு ரங்கென் வசத்திலே
ஏத நீத்துள் ளடங்கு நாளது வீச னீவந் துரைக்குநாள்
பாத நம்பிய தாசன் பாலருள் பண்ண வேண்டுமிந் நேரமே
வேத னேகரு ணால யாவடி வேலை யாவறி வாயரோ. 3

---

***10. கிரி*** = *அருணகிரிநாதர்*

***1. நந்துமோவென்பது*** *"நத்துமோ" வென வலித்தல்விகார மாயிற்று.* ***நந்தல்*** = *உண்டாதல்.*

**செ**ய்யும் யோகந் தவறி னாயெனச் செப்பி னாயிரண் டறிகுறி
மையு ளேனொன்றை யேம றந்து மருண்ட துண்டதை மீட்டுமென்
ஐய நீயருள் செய்த தாயிலை யாவர் பாலிதை யோதுவேன்
பொய்யி லாவயில் வேல ணாபரி பூர ணாவறி வாயரோ. 4

யோக நிலைபற்றி அடிகளுக்கு இறைவன் அறிவித்த அறிவிப்பு, இந்த 4ஆந் தூக்கிற் காணப்படுகின்றதன்றோ, சரித்திரக்கண்ணுங் கூறப்பட்டதாம்.

**ஏ**கு மூச்சை யிழுத்து நானுள் ளிருத்தி யேகட்ட வென்னினும்
தேக மோதிட மில்லை யவ்வழி தேர வும்மிலை யிவ்வுயிர்
போகு நாளென்ன செய்கு வேனின் பொறுப்பி லேயெனை யொப்பித்தேன்
மாகர் போற்றிடு மாம ணாசிகி வாக ணாவறி வாயரோ. 5

**ஈ**ச னாகவுஞ் சீவ னாகவு மெண்ணின் மாசக மாகவும்
நாச மேது மிலாத தாய்நிற்கு ஞாயத் தீர்வையி னானுமொன்
றேசி லாதெனை யாக்கும் பண்பிங் கெனக்கொன் றேதின் றுனக்குண்டே
பாச நாசகிர் பாநி தீமிளிர் பாவ கீயறி வாயரோ. 6

**எ**ன்று முன்றனைக் கண்டு கொண்டடி யேத்தும் பாடு பெறாதவர்
ஒன்றி னுந்திட முற்றி டார்களி துள்ள தேபொது வாகவே
அன்று சொன்ன படிக்கு நீவந் தழைக்கு நாளதி தூரமோ
குன்றி யேமனங் கன்று கின்றது கொள்கு காவறி வாயரோ. 7

**வா**க்கிற் பொய்யு மனத்தில் வஞ்சமு மல்கு மென்றென் றொழிலெலாம்
போக்கி நின்பத மேத்தி யுய்வது போது மென்றுனை நம்பினேன்
காக்க வுன்பர மேப ரங்குளக் கண்ணு ளோயிக விண்ணுளோய்
ஆக்க நீடு சடக்க ராசர வாட்டை யாவறி வாயரோ. 8

**த**ந்தை தாயுஞ் சகோத ரங்களுந் தார முஞ்சுகு மாரரும்
பந்து வும்மித்ர சொந்த மும்பல் பவுள்சு நின்பத மாகவே
சிந்தை செய்ததைத் தேடி னேனன்றித் தேடி வைத்ததொன் றில்லையே
கந்த னேயிரும் பாவ லாவள்ளி காவ லாவறி வாயரோ. 9

***9. மித்ரம்*** = *வடநூன்முடிபு.*

**ஊ**ரும் பேருரு வுஞ்செல் லாகவென் றூரும் பேருரு வுந்தரித்
தாருஞ் சொல்லற் கருஞ்சொல் லொன்றை யருள்செய் தங்கிச மாக்கொளுஞ்
சீரு டைக்குரு மூர்த்தி யேயிவன் செய்யும் விண்ணப்ப முய்யவே
சாரு டைப்புகழ் பாடி னோன்கண்ட சண்மு காவறி வாயரோ. 10

நந்தன வருடம் மாசி மாதம் 26ஆம் தேதி புதவாரம்.